குழந்தைகளுக்கு வேதாகமம்

வழங்குபவர்



# கிணற்றின் அருகாமையில் ஒரு பெண்

எழுதியவர்: Edward Hughes

சித்தரிப்பவர்: Lazarus
Alastair Paterson

தழுவியவர்: Ruth Klassen

மொழிபெயர்ப்பாளர்: Rev. Dr. Dasan Jeyaraj

உருவாக்குபவர்: Bible for Children
www.M1914.org

©2022 Bible for Children, Inc.
உரிமம்: இந்த கதையை நகலெடுக்கவோ, அச்சிடவோ அனுமதி உண்டு ஆனால் இதை விற்பதற்கு அனுமதி இல்லை.

இயேசுவும் அவருடைய சீஷர்களும் சமாரியா நாட்டின் வழியாக பிரயாணம் பண்ணிக் கொண்டிருந்தார்கள். சீகார் என்றழைக்கப்படுகிற பட்டணத்திற்கு வந்தார்கள்.



சீகார் மக்கள் குடிதண்ணீர் எடுக்கும் கிணறு அங்கே இருந்தது. இஸ்ரவேலுக்கு, தகப்பனான, யாக்கோபு அந்தக் கிணற்றை பல வருடங்களுக்கு முன்னால் தோண்டினான்.



முன் பகலானது பிரகாசமாகவும், வெட்கையாகவும் இருந்திருக்கலாம்.  சீஷர்கள் தங்களுக்கு போஜனம் வாங்க சீகார் சென்றபோது, இயேசு களைப்புடன் அந்தக் கிணற்றறுகே உட்கார்ந்தார்.





இயேசு தனியாக இருந்தார். ஆனால் அது நீண்ட நேரமாகல்ல. சீகாரை சேர்ந்த ஒர் பெண்மணி தண்ணீர் மொண்டுகொள்ள வந்தாள்.

"தாகத்துக்குத் தா" என்று இயேசு அவளிடம் கேட்டார்.

அந்தப் பெண்மணி ஆச்சரியப்பட்டாள். "நீர் யூதனாயிருக்க, சமாரியப் பெண்ணான என்னிடம், தாகத்துக்கு தா, என்று எப்படி கேட்கலாம்?" என்றாள் அவள். அந்த நாட்களில், யூதர்கள் சமாரியரோடு சம்மந்தங்கலவாதிருந்தார்கள்!



"நான் யாரென்று நீ
அறிந்திருந்தாயானால்,
நீ என்னிடத்தில் ஜீவ
தண்ணீரைக்
கேட்டிருப்பாய்,"
என்று இயேசு
சொன்னதைக்
கேட்டு அவள்
இன்னும் அதிகமாக
ஆச்சரியப்பட்டிருக்கலாம்.





அந்தப் பெண்மணி
இயேசுவிடம் சொன்னாள்,
"ஐயா, மொண்டுகொள்வதற்கு
ஒன்றுமில்லை, கிணறும் ஆழமாயிருக்கிறது. பின்
எங்கேயிருந்து உமக்கு ஜீவத் தண்ணீர் கிடைக்கும்?
இந்தக் கிணற்றை எங்களுக்கு கொடுத்த, எங்கள்
பிதாவாகிய, யாக்கோபிலும் நீர் பெரியவரா ..."



"இந்தத் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கு மறுபடியும் தாகமுண்டாகும்," என்று இயேசு அந்தப் பெண்மணியிடம் சொன்னார்.



"நான் கொடுக்கும்
தண்ணீரைக்
குடிக்கிறவனுக்கோ,
ஒருக்காலும்
தாகமுண்டாகாது: நான்
அவனுக்குக் கொடுக்கும்
தண்ணீர் அவனுக்குள்ளே
நித்திய ஜீவகாலமாய்
ஊறுகிற நீருற்றாயிருக்கும்."
"ஐயா, அந்த தண்ணீரை
எனக்கு கொடும் ..." என்று
அவள் சொன்னாள்.

உன் கணவரை அழைத்துக்கொண்டு வா என்று இயேசு அவளிடம் சொன்னார். "எனக்குப் புருஷன் இல்லை," என்றாள் அவள். "உனக்கு ஐந்து புருஷர் இருந்தார்கள். இப்போது உனக்கிருக்கிறவன் உனக்கு புருஷனல்ல," என்றார் இயேசு.



அந்த பெண் இயேசு ஒரு தீர்க்கதரிசி என்று அறிந்து கொண்டு, தேவனை எங்கே ஆராதிக்கவேண்டும்: எருசலேமிலா அல்லது சமாரியர்களின் பரிசுத்த மலையிலா என்று விவாதிக்க இயேசுவை அவள் உந்தினாள். இயேசு சொன்னது உண்மையிலே தேவனை ஆராதிப்பவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ளுகிறார்கள்.



"மேசியா வருகிறார் என்று நான் அறிந்திருக்கிறேன்," என்று அந்த பெண் இயேசுவிடம் சொன்னாள். "அவர் வரும்போது, எல்லாவற்றையும் நமக்கு அறிவிப்பார். உன்னுடனே பேசுகிற நானே அவர், என்று இயேசு அவளிடம் சொன்னார்." அப்பொழுது, சீஷர்கள் திரும்பி வந்தார்கள். விலைமதிப்பற்ற தன்னுடைய தண்ணீர் குடத்தை கிணற்றின் அருகாமையிலே விட்டுவிட்டு பட்டணத்திற்குள்ளே ஓடினாள்.





"வாருங்கள், நான்
செய்த எல்லாவற்றையும்
எனக்கு சொன்னவரை
வந்து பாருங்கள்"
என்று அந்த பெண்
சீகார் மனிதர்களிடம்
சொன்னாள். "அவர்
கிறிஸ்து தானோ?"
அந்த மனிதர்
பட்டணத்தை
விட்டுப்போய்
இயேசுவை
தாங்கள்
கண்டு கொள்ள
வந்தார்கள்.

இப்படி நடக்கையில், சீஷர்கள் இயேசுவை போஜனம் பண்ண சொன்னார்கள். ஆனால் இயேசு சொன்னார், "என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருகிறது."

அவருடைய வேலையென்னவென்றால் மக்களை தேவனின் அருகில் கொண்டுவருவது.



அந்தப் பெண்ணின் வார்த்தைகளைக் கேட்டு இன்னும் அநேகர் இயேசுவின் மேல் விசுவாசம் வைத்தார்கள்.  இயேசுவை தங்களோடு தங்கும்படி கேட்டுக் கொண்டார்கள்: அவர் இன்னும் இரண்டு நாட்கள் அங்கே தங்கினார்.



இன்னும் அநேக சமாரியர்கள் இயேசுவின் சொந்த வார்த்தையைக் கேட்டு அவரை விசுவாசித்தார்கள். அவர்கள் சொன்னது, "... அவருடைய உபதேசத்தை



நாங்களே கேட்டிருக்கிறோம், அவர் மெய்யாகவே கிறிஸ்துவாகிய உலகரட்சகர்."

# கிணற்றின் அருகாமையில் ஒரு பெண்

தேவனுடைய வார்த்தையாகிய
வேதாகமத்திலிருந்து ஒரு கதை

காணப்படுமிடம்

யோவான் 4

“தேவனுடைய வார்த்தை உட்பிரவேசிக்கும் போது
வெளிச்சம் கொடுக்கிறது.” சங்கீதம் 119:130

முற்றும்

இந்த வேதாகம கதைகளானது நம்மை படைத்த மற்றும் நீங்கள் அவரை அறிந்து கொள்ள வேண்டுமென்கிற அற்புதமான தேவனைப் பற்றியதாகும்.

நாம் அநேக தவறுதல்களைச் செய்திருக்கிறோம் என்று தேவனுக்குத் தெரியும். அவர் அதை பாவம் என்று கூறுகிறார். பாவத்திற்கு தண்டனையோ மரணம் ஆனால் தேவன் நம்மை அதிகமாக நேசிப்பதினாலே, தன்னுடைய சொந்த குமாரனாகிய இயேசுவை அனுப்பி, நம்முடைய பாவங்களுக்காக அவரை சிலுவையில் மரணமடையச் செய்தார். பின்பு இயேசு உயிருடன் எழும்பி பரலோக வீட்டிற்குச் சென்றார். நீங்கள் இயேசுவை விசுவாசித்து, உங்களுடைய பாவங்களுக்கு மன்னிப்பு கேட்டால் அவர் அதைச் செய்வார். அவர் இன்றே உங்களிடத்தில் வந்து உங்களில் வாசம் பண்ணுவார், நீங்களும் என்றென்றும் அவரோடு வாசம் பண்ணுவீர்கள்.

இது உண்மையானது என்று நீங்கள் நம்பினால், பின்வரும் வாக்கியங்களை தேவனிடத்தில் சொல்லலாம். பிரியமுள்ள இயேசு, நீர் தேவனென்று நான் நம்புகிறேன், எனக்காக நீர் மனிதனாக வந்து என்னுடைய பாவங்களுக்கு மரித்து, இப்போது நீர் மறுபடியும் உயிரோடிருக்கிறீர். தயவு செய்து எனக்குள்ளே வாரும், என்னுடைய பாவங்களை மன்னியும், அதினாலே இன்று ஒரு புதிய வாழ்க்கையை நான் பெற்று, ஒரு நாளில் நான் உம்மோடு என்றென்றும் இருக்க உதவி செய்யும். உமக்கு கீழ்ப்படிந்து நடக்க உதவி செய்யும். உம்முடைய பிள்ளையாக உமக்கு கீழ்ப்படிந்து நடக்க உதவி செய்யும். ஆமென்.

வேதாகமத்தை தினந்தோறும் வாசித்து தேவனிடம் பேசுங்கள் யோவான் 3:16